# எழுத்துகளைச் சரியாக உள்வாங்காமையால் ஏற்படும்பிழைகள்

**பிழை எண் 1**

**எந்த எழுத்து எங்கு வரும் என்று தெரியாததால் வரும் பிழை.**

உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்த எழுத்து ஆகிய எழுத்துகள் சொல்லில் எங்கு வரும் என்ற விளக்கத்தை அறியவும். இந்த விதியை மீறிய வகையில் எழுத்துகள் சொற்களில் இருந்தால் அவை பிழையான சொற்கள் என்று அறியலாம். பிழை அறிந்து, தவிர்க்க முயற்சி செய்யவும்

**பிழை எண் 2**

**எழுத்துகளை ஒலிப்பது பிழையானால் எழுதுவதும் பிழையாகும்.**

ர, ற இரண்டு எழுத்துகளும் - ந, ன, ண மூன்று எழுத்துகளும் - ல, ள, ழ மூன்று எழுத்துகளும் சரியாக ஒலிக்கப்பட வேண்டும். பிழையாக ஒலித்தால் எழுதுபவரும் பிழையாகவே எழுதுவார்கள்

**மரம், மறம் - நிறம், நிரம் - வருவல், வறுவல்**

இரண்டு சொற்களிலும் எழுத்துகள் வேறுபட்டாலும், இரண்டின் ஒலிப்பும் ஒன்றுபோலவே ஒலிப்பதால் இவை மயங்கொலிச் சொற்கள் என அழைக்கப்படுகின்றன. மயங்கெலிச் சொற்களால் வரும் பிழைகள் மிகவும் அதிகம். எனவே சொற்களில் உள்ள எழுத்துகளையும் சொல்லின் பொருளையும் நெஞ்சில் நிறுத்திப் பிழைகளைத் தவிர்க்க முயற்சி செய்யவும்.

**பிழை எண் 3**

**குறில் நெடில் வேறுபாடு தெரியாமல் எழுத்துகளை ஒலிப்பதில் ஏற்படுகிற பிழை.**

குறிலை நெடிலாகவும், நெடிலை குறிலாகவும் ஒலித்துப் பழகினால், எழுத்துகளை எழுதும் பொழுது பிழை வரும். எ, ஏ – கெ, கே – ஒ, ஓ – கொ, கோ – வரிசை எழுத்துகளை எழுதும் பொழுது மாணவர்கள் அதிகமாகப் பிழை செய்கிறார்கள். எனவே குறில் நெடில் எழுத்துகளைச் சரியாக ஒலித்துப் பழவும். குறில் நெடில் எழுத்துகளை எப்படி எழுதுவது என்பதையும் உள்வாங்கவும்

இத்துடன் எழுத்து தொடர்பான கருத்துருக்கள் நிறைவடைகின்றன. விடுபட்ட கருத்துருக்கள் இருந்தால் அருள்கூர்ந்து இணைத்துக் கொள்ளவும். எழுத்துதொடர்பாக எழும் பிழைகளை வரிசைப்படுத்தி விடுபட்டவை இருந்தால் அவற்றையும் இணைத்துக் கொள்ளவும். பிழைகளை நீக்கி எழுதவும் பேசவும் பயிற்சி எடுக்கவும்

# சொல் - பிழை வரும் இடங்கள்

**பிழை எண் 4 (சேர்க்கவா, பிரிக்கவா) சொற்களை எழுதுவதில் ஏற்படுகிற பிழை.**

ஒரு சொல்லும் இன்னொரு சொல்லும் இணைந்து புதிய சொல் உருவாகும்போது இரண்டு சொற்களையும் பிரித்து எழுதுவதா, சேர்த்து எழுதுவதா என்ற பிரச்சனை எழுகிறது.

**பிழை எண் 5 ----- அதுவா இதுவா ----- எது சரி ?**

ஒன்றுபோலக் காட்சி தருகிற சொற்களைப் பிழையாகப் பயன்படுத்துதல். பெரும்பாலானவர்கள் இந்த வகையான பிழைகளையே அதிகமாகச் செய்கிறார்கள். இரண்டு சொற்களும் எங்கு வரவேண்டும். இரண்டு சொற்களுக்கான பொருள் என்ன ? என்று அறியாதவர்கள்தான் இந்தப் பிழைகளைச் செய்கிறார்கள். ஒவ்வொரு சொல்லையும் நுட்பமாக நோக்கினால் இந்தப் பிழையை விலக்கலாம்.

**பிழை எண் 6 - பிழையான சொற்களைக் கண்டறிந்து நீக்குதல்.**

பல்வேறு சூழல்களினால் ஒரு சொல்லில் உள்ள எழுத்துகள் மாற்றம் அடைந்து பிழையாக ஒலிக்கப்பட்டு, காலப்போக்கில் சரியான சொல்லுக்கு மாற்றாகவே ஒலிக்கப் படுகிறது. இவை பிழை என்று அறியாமலேயே ஒலிக்கப் படுகின்றன. சரியான சொற்களை உள்வாங்கிப் பிழையை நீக்கவும்.

**பிழை எண் 7 - தமிழில் பல்வேறு அயற்சொற்களைக் கலந்து எழுதுதல், பேசுதல்.**

வடசொல், திசைச் சொல் என்று இலக்கண நூல்களில் கொடுக்கப்பட்டுள்ளவை அயற்சொற்களே. இவற்றைக் கலவாமல் பேசுவதும் எழுதுவதும் வணங்குதற்குரியது. எவை அயற்சொற்கள் என்று கண்டறிந்து அவற்றை விலக்கிப் பேசவும், எழுதவும் பயிற்சி எடுத்துக் கொள்ளவும்.

**பிழை எண் 8 – மயங்கொலிச் சொற்களைப் பிழையாகப் பயன்படுத்துதல்**

மயங்கொலிச் சொற்கள் ஒலிப்பின் போது நுண்ணிய வேறுபாடுகளை மட்டுமே கொண்டிருப்பதால் எது சரி, எது தவறு என மயங்க வைப்பவையாக இருக்கும். அதனாலேயே இவை மயங்கொலிச் சொற்கள் என்றழைக்கப்படுகின்றன. பட்டியலைப் பார்த்து, அந்தச் சொற்களைத் தொடர்வடிவில் அமைத்துச் சொற்களின் பொருளை உள்வாங்கினால் இந்தப் பிழை வராது. தொடர் வடிவில் அமைத்த பட்டியலைப்பார்த்துச் சொற்களின் நுண் பொருளை உள்வாங்கவும்.

இத்துடன் சொல் தொடர்பான செய்திகள் நிறைவடைந்தன. விடுபட்ட செய்திகள் இருந்தால் அருள்கூர்ந்து அவற்றை இணைத்துக் கொள்ளவும். பிழைகள் பட்டியலில் உள்ளவற்றை நுட்பமாக உள்வாங்கி, ஒவ்வொன்றாகப் பயிற்சி எடுக்கவும். பிழைகள் நீக்கிப் பேச எழுதத் திட்டமிடவும்.

# தொடர் உருவாக்கும் பொழுது ஏற்படுகிற பிழைகள்

பிழை எண் 9 : வேற்றுமை உருபுகள் பெயர்ச் சொற்களோடு இணைந்து உருவாகும் சொற்கள் என்ன பொருளைத் தருகின்றன என்ற புரிதல் இல்லாததால், பிழையான தொடர்கள் உருவாக்கப்படுகின்றன. பொருள் உணர்ந்து இதைத் தவிர்க்க வேண்டும்.

பிழை எண் 10 : வினைச் சொற்களோடு, இடைநிலை, காலம் காட்டும் விகுதி, திணை, பால், ஒருமை, பன்மை – என்பவற்றுக்கான சொற்களைப் பிழையாக அமைத்தல். சரியாக அமைக்காவிட்டால் பொருள் மாறுபடும். பிழை ஏற்படும். பிழை நீக்க ஒவ்வொரு தலைப்பையும் பொருளை உணர்ந்து நுட்பமாக உள்வாங்கவும்.

1.சொற்களில் பிழையான எழுத்துகளை எழுதுதல்
2.எழுத்துகளைப் பிழையாக ஒலித்தால் எழுதுவதும் பிழையாகும்.
3.குறில் நெடில் தெரியாததால், பிழையாக ஒலிப்பதால் எழுதுவதும் பிழையாகும்.
4.சொற்களைப் பிரித்து எழுதுவதிலும், இணைத்து எழுதுவதிலும் ஏற்படும் பிழை.
5.ஒன்றுபோலத் தோற்றமளிக்கிற சொற்களைப் பிழையாகப் பயன்படுத்துதல்.
6.சூழலில் பிழையாகப் பயன்படுத்துகிற சொற்களைப் பயன்படுத்துதல்.
7.அயற்சொற்களை பயன்படுத்துதல்,
8.மயங்கொலிச் சொற்களைத் தொடர்களில் பிழையாகப் பயன்படுத்துதல்.
9.வேற்றுமை உருபுகளைப் பிழையாகப் பயன்படுத்துதல்.
10.வினைச்சொற்களில் திணை, பால், எண், காலம் பிழையாகப் பயன்படுத்துதல்.

எழுத்தை அறிதல், சரியாக ஒலித்தல், சொற்களைப் பொருள் உணர்ந்து உள்வாங்குதல், அயற்சொற்களை விலக்கி எழுதப் பயிற்சி எடுத்தல், மயங்கொலிச் சொற்களை உணர்ந்து தொடர்களை எழுதுதல், வேற்றுமை உருபுகளையும், திணை, பால், எண், காலம் என்பவற்றையும் சரியாக உணர்ந்து உள்வாங்கி எழுதுதல் என்கிற பயிற்சிகளின் வழியாகப், பிழையில்லாமல் எழுதவும் பேசவும், படி அமைக்கலாம்.

முதலில் எழுதத் தொடங்க வேண்டும். பத்து வரிகள் எழுதினால் போதும். ஒவ்வொரு பிழையாக உணர்ந்து, உள்வாங்கி அந்தப் பிழை இல்லாமல் எழுதுவது என்று படிப் படியாக பயிற்சி செய்ய வேண்டும். வரைய வரைய படங்கள் அழகாவது போல, எழுத எழுதப் பிழைகள் தானாகவே விலகி ஓடும். எழுதுவதும் பேசுவதும் ஒன்றாக இருக்குமானால் உங்களை இந்த உலகமே வணங்கும். வாழ்த்துகள்.